**நகர்மன்றம்,**
**போடிநாயக்கனூர், நாள். 31.07.2019**

2019ம் ஆண்டு ஜுலை மாதம் 31.07.2019ம் தேதி புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திரு.கி.ஜெயராமராஜா, எம்.ஏ.,
ஆணையாளர்(பொ) மற்றும் தனிஅலுவலர்

1) இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜுலை 2019ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மான எண் : 455** அனுமதிக்கப்பட்டது.
**(ந.க.எ.ண்.2146/2019/சி1)**

2) இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுலை 2019ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மான எண் : 456** அனுமதிக்கப்பட்டது.
(ந.க.எ.ண்.2146/2019/சி1)

3) இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 60 Z 3534 வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு மேற்கண்ட வாகனத்தில் உள்ள பழுதுகளை தனியார் நிறுவனம் மூலம் பழுதுநீக்கம் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | பாண்டியன் ஆட்டோமொபைல்ஸ், பெரியகுளம் | 81,900/- |
| 2 | KMA MOTORS, திண்டுக்கல் | 74,950/- |

**அலுவலகக்குறிப்பு:–**

01. குறைந்த விலைப்புள்ளி வழங்கிய பாண்டியன் ஆட்டோமொபைல்ஸ், பெரியகுளம் நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கலாம்.
02. இச்செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 457** அனுமதிக்கப்பட்டது.
**ந.க.எண்:2535/2019/H2**

**4)** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 60 S 2049 வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு மேற்கண்ட வாகனத்தில் உள்ள பழுதுகளை தனியார் நிறுவனம் மூலம் பழுதுநீக்கம் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | பாண்டியன் ஆட்டோமொபைல்ஸ், பெரியகுளம் | 44,950/- |
| 2 | KMA MOTORS, திண்டுக்கல் | 50,000/- |

**அலுவலகக்குறிப்பு:–**

01. குறைந்த விலைப்புள்ளி வழங்கிய பாண்டியன் ஆட்டோமொபைல்ஸ், பெரியகுளம் நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கலாம்.

02. இச்செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 458** அனுமதிக்கப்பட்டது.
**ந.க.எண்:2159/2019/H2**

**5)** திரு.போஸ் என்பவர் தனது மகள் ரேவதி என்பவர் 10.05.1984–ல் பிறந்ததாகவும் மருத்துவமனையில் 25.05.1984 என தவறுதலாக பதியப்பட்டுள்ளதாகவும் போடிநாயக்கனூர் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளார். எனவே நீதிமன்ற விசாரனைக்கு நேரில் ஆஜராகுமாறு கடிதம் வரப்பெற்று. இந்நகராட்சி வழக்கறிஞர் திரு.B.R.பாலமுரளி, அவர்கள் நேரில் ஆஜரானதற்கு கட்டணம் ரூ.5000/– கேட்டுள்ளார். எனவே அவருக்கு ரூ.5000/– வழங்கவும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மான எண் : 459** அனுமதிக்கப்பட்டது.
**ந.க.எண்: 417**/2019/H2

**6)** திரு.வள்ளிமுத்து என்பவர் தனது மகள் திருமதி.மகேஷ்வரி என்பவரின் பிறந்த தேதி 27.03.1982 எனவும் ஆனால் இந்நகராட்சி பிறப்பு பதிவேட்டில் தவறுதலாக 28.03.1982 ஆக உள்ளதாகவும் போடிநாயக்கனூர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட நீதிமன்ற விசாரனைக்கு இந்நகராட்சி வழக்கறிஞர் திரு.B.R.பாலமுரளி, அவர்கள் நேரில் ஆஜராகி வருகிறார். மேற்கொண்டு 19.03.2019 அன்று நேரில் ஆஜரானதற்கு ரூ.5000/– கட்டணம் கேட்டு விண்ணப்பித்துள்ளார். எனவே மேற்கண்ட தொகையினை வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்கவும் அதற்கான செலவினத்தை. இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மான எண் : 460** அனுமதிக்கப்பட்டது.
**ந.க.எண்: 895/2019/H2**

7) இந்நகராட்சி பொது சுகாதார பணிகளுக்கு தேவையான சுண்ணாம்புத்தூள் 100 டன் பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி கொள்முதல் செய்ய தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | தொகை ரூ (1 கிலோ) |
|---|---|---|
| 1 | இசையா அசோசியேட்ஸ், வத்தலகுண்டு | 8.5/- |
| 2 | சங்கர் இன்ஜினியரிங், சென்னை | 8.75/- |

**அலுவலகக்குறிப்பு:–**

01. குறைந்த விலைப்புள்ளி வழங்கிய இசையா அசோசியேட்ஸ், வத்தலகுண்டு நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கலாம்.
02. இச்செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
03. மேற்கண்ட செலவினத்துடன் சேர்த்து கூடுதல் வரியையும் மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 461** அனுமதிக்கப்பட்டது.

**ந.க.எண்:2484/2019/H2**

8) இந்நகராட்சி பொது சுகாதார பணிகளுக்கு தேவையான பிளீச்சீங் பவுடர் 10 டன், பினாயில் 1000 லிட்டர் பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி கொள்முதல் செய்ய தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | தொகை ரூ (1 கிலோ/ 1 லிட்டர்) |
|---|---|---|
| 1 | இசையா அசோசியேட்ஸ், வத்தலகுண்டு | பிளீச்சீங் பவுடர்- 39/-<br>பினாயில்- 48/- |
| 2 | சங்கர் இன்ஜினியரிங், சென்னை | பிளீச்சீங் பவுடர்- 40/-<br>பினாயில்- 49.75/- |

**அலுவலகக்குறிப்பு:–**

01. குறைந்த விலைப்புள்ளி வழங்கிய இசையா அசோசியேட்ஸ், வத்தலகுண்டு நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கலாம்.
02. இச்செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
03. மேற்கண்ட செலவினத்துடன் சேர்த்து கூடுதல் வரியையும் மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 462** அனுமதிக்கப்பட்டது.

**ந.க.எண்:2485/2019/H2**

9) போடிநாயக்கனூர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்தில் சாலைக்காளியம்மன் கோவில் அருகில் உள்ள கழிவு நீர் உந்து நிலையத்தில் 90HP, 50HP இரண்டு எண்ணம் ஆக மொத்தம் 3 நீர் மூழ்கி மோட்டார்கள் பயன்படுத்ததப்பட்டு வருகிறது. இவற்றில் ஒரு 50HP நீர் மோட்டாரின் அடிப்பாதத்தில் உள்ள பிளேட் உடைந்துவிட்டது. 90HP மின் மோட்டாரின் ஆயில்சீல், மெக்கானிக்கல்சீல் பழுது அடைந்துவிட்டது. மீதமுள்ள ஒரு 50HP மின் மோட்டாரில் பகுதி பிளேட்டில் உள்ள கீரல் வெல்டிங் செய்யப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. எனவே அவசர அவசியம் கருதி மேற்படி இரண்டு 50HP மின்மோட்டார்களுக்கு அடிப்பகுதி பியேட் வாங்க வேண்டி உள்ளது. 90HP மின்மோட்டார்க்கு மெக்கானிக்கல்சீல் மாற்றி பழுது சரி செய்ய வேண்டி உள்ளது. மேற்படி பணிகளுக்கு ரூ.2.30 லட்சம் வரை செலவாகும். மேலும் மேற்படி மோட்டார்கள் Kishor pumps தயாரித்த மோட்டார்கள் ஆகும். எனவே Kishor pump நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற டீலர் மற்றும் சர்வீஸ் சென்டர் M/s Aish Technologies, சென்னை நிறுவனத்தின் மூலம் மேற்படி மோட்டார்களின் பழுதுகள் சரி செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**
1. மன்றத்தின் முன்அனுமதிபெற்று பணிகள் மேற்கொண்டமைக்கும் அனுமதிக்கலாம்.
2. இப்பணியை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15c–ன் கீழ் மேற்கொண்டதை மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண் : 463** அனுமதிக்கப்பட்டது.
**ந.க.எண்:**3305/2019/இ1

10) போடிநாயக்கனூர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்தில் துணை கழிவு நீர் உந்து நிலையத்தில் உள்ள 50HP நீர் மூழ்கி மின் மோட்டாரின் அடிப்பாகம் உடைந்துவிட்டதால் மோட்டாரை இயக்க இயலவில்லை மற்றொரு மாற்று 50HP மின் மோட்டார் மூலம் கழிவு நீர் பம்பிங்செய்யப்பட்டு வருகிறது. எனவே அவசர அவசியம் கருதி 50HP மின் மோட்டாரின் பழுதடைந்த அடிப்பாகம் புதிதாக செய்து பொருத்துவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.35,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**
1. மன்றத்தின் முன்அனுமதிபெற்று பணிகள் மேற்கொண்டமைக்கும்.
2. இப்பணியை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15c–ன் கீழ் மேற்கொண்டதை மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண் : 464** அனுமதிக்கப்பட்டது.
**ந.க.எண்:** 3356/2019/இ1

11) போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25, போடையன் சந்து, கதவு எண்கள்.1, 1ஏ மற்றும் 1பி க்கு முறையே சொத்துவரி விதிப்பு எண்கள்.13853, 14212 மற்றும் 14214 ஆகிய தங்கும் விடுதிக்கு சொத்துவரி சரியான முறையில் நிர்ணயம் செய்ய கோரி திரு.ராதாகிருஷ்ணன், போடிநாயக்கனூர் என்பவரால் தேனி, சார்பு நீதிமன்றத்தில் நகராட்சி மீது தொடரப்பட்ட வழக்கு எண்.O.S.No.21/2014ற்கு ஆஜராகியமைக்கும், மேற்படி வழக்கிற்கு நகராட்சிக்கு சாதகமாக வரப்பெற்ற தீர்ப்பின் மீது மனுதாரரால் தேனி, சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டமைக்கான வழக்கு எண்.A.S.No.31/2018ன் மீது நகராட்சி சார்பாக கேவியட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டமைக்கு திரு.B.R.பாலமுரளி, அரசு வழக்கறிஞர், மாவட்ட நடுவர் மற்றும் உரிமையியல் நீதிமன்றம், போடிநாயக்கனூர் அவர்களின் 29.04.2019ம் தேதிய கடிதம் மற்றும் மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. மேற்காணும் கடிதத்தில் கோரியுள்ளபடி வழக்கறிஞர் கட்டணமாக ரூ.15,000/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 465** அனுமதிக்கப்பட்டது.
**( ந.க.எண்.** 5320/2015 /அ1).

12) போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள், நகராட்சி மருத்துவமனை, பேருந்து நிலையம், அங்கன் வாடி மையங்கள், கழிப்பறைகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டு உள்ள மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் பழுது அடைந்து இருப்பதால், அவற்றை பழுது சரி செய்து முழுமையாக பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 லட்சத்தினை பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 466** அனுமதிக்கப்பட்டது.

**ந.க.எண்: 3302**/2019/இ1

13) போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் 189 சிறு மின்விசை பம்புகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டு உள்ளது. தற்பொழுது நீர் வரத்து குறைவாக வருவதால் பொதுமக்கள் அதிகளவில் சிறுமின்விசைபம்பு பயன்படுத்தப்படுவதால், தற்பொழுது உள்ள தண்ணீர் தொட்டியில் இருந்து குழாய்கள் நீடிப்பு செய்யுமாறு கோருகின்றனர். மேலும் தண்ணீர் தொட்டிகள் தாங்கி நிற்கும் அடிப்பாகம் மற்றும் குழாய்மேடை பழுது அடைந்து உள்ளது. எனவே இவற்றை பழுது சரி செய்யவும் அதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.75 லட்சத்தினை குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 467** அனுமதிக்கப்பட்டது.

**ந.க.எண்: 3303**/2019/இ1

14) போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் மழைநீர் வடிகாலில் குறுக்கே கட்டப்பட்டு உள்ள சிறுபாலங்கள் ஆங்காங்கு சேதமடைந்து மழைநீர் செல்ல வழியின்றி தேங்கி சுகாதார கேடு ஏற்படுகிறது. இது குறித்து சுகாதார ஆய்வர்கள் புகார் தெரிவித்து உள்ளனர். எனவே அதன் அடிப்படையில் பழுதடைந்த சிறுபாலங்களை அகற்றிவிட்டு அங்கு புதிய சிறுபாலங்கள் அமைக்கவும், அதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 லட்சத்தினை பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 468** அனுமதிக்கப்பட்டது.

**ந.க.எண்: 3304**/2019/இ1

15) போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு.10. SS.புரம் கிழக்கு 3வது சந்தில் அமைந்துள்ள சிறு மின்விசைப்பம்பின் தொட்டி சாலையில் நடுவே உள்ளது. எனவே அதனை மாற்றி அருகில் உள்ள பூங்கா இடத்தில் அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.70,000/—ஐ குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 469** அனுமதிக்கப்பட்டது.

**ந.க.எண்: 2846**/2019/இ1

**16)** இந்நகராட்சிக்கு சொந்தமான வாகன எண்.TN60V1693 வண்டிக்கு பழுது பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.50,000/—ஐ பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பணியின் விபரம்:**

1. அனைத்து ஆயில் மற்றும் டீசல் பில்டர் ஆயில் பில்டர் புதியதாக மாற்றுதல்.
2. வாகனத்தில் இடதுபுற செட்லைட் புதியதாக மாற்றுதல்.
3. போக்ஸ் லைட் புதியதாக மாற்றுதல்.
4. ஹர்ன் புதியதாக மாற்றுதல்
5. வீல் அலைமெண்ட் சரி செய்தல்
6. பிரேக் சரி செய்தல்
7. வைப்பர்பிளேடு புதியதாக மாற்றுதல்
8. பின்பக்க கதவுலாக் சரி செய்தல்
9. கி.மீ பழுது நீக்குதல்
10. வாகனத்தில் உள்ளே டாப்லைட் புதியதாக மாற்றுதல்.
11. வாகனத்தில் பம்பிங் மாற்றுதல்.
12. போக்ஸ் லைட் மாட்டுதல்.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றத்தின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
2. இப்பணியினை கம்பம் அகரம் மோட்டார்ஸ் (உரிமையாளர் திரு.ராமராஜ்) மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண் : 470** அனுமதிக்கப்பட்டது.

**ந.க.எண்.2635/2019/இ1.**

**17)** போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்:**32.** சிட்னி விளையாட்டு மைதானத்தில் பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இந்து தமிழ் நாளிதழில் விளம்பரம் வெளியிட்டமைக்கு உரிய பட்டியல் தொகை ரூ.**12,437**/—வரப் பெற்றுள்ளது. ஆதற்கான தொகையை BRIGHT Advertising, Chennai அவர்களுக்கு வழங்கும் பொருட்டு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 471** அனுமதிக்கப்பட்டது.

**ந.க.எண்: 4548**/17/இ1

**18)** இந்நகராட்சியின் பொறியாளரின் Dsc Card **26.06.2019**— அன்று 2 ஆண்டு Validity முடிவடைந்துள்ளது. Dsc – பழைய E-token என்பதால் தற்போது புதுப்பிக்க இயலாத காரணத்தினால் புதியதாக வாங்கி பயன்படுத்துவதற்கு உத்தேச செலவினம் ரூ.**2,600**/—ஐ பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :**மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 472** அனுமதிக்கப்பட்டது.

**ந.க.எண்:3462**/2019/இ1

19) போடிநாயக்கனூர் நகராட்சி 22–வது வார்டு நகராட்சி பணியாளர் குடியிருப்பு வளாகத்தில் உள்ள காய்ந்த வேப்பமர கிளைகளை சொந்த செலவில் அகற்றிக்கொள்வதற்கு 05.07.2019 ம் அன்று பொது ஏலம் விடப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஏலம் கோரப்பட்டது.

| வ.எண் | பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | திரு.முத்துராமலிங்கம்<br>பங்காரு மேற்குத்தெரு,<br>போடிநாயக்கனூர். | 950 |
| 2 | திரு.எல். எல்லப்பன்<br>பங்காரு தெரு,<br>போடிநாயக்கனூர். | 650 |

**அலுவலகக் குறிப்பு :**

1. மேற்காணும் பொது ஏலத்தில் அதிகபட்ச தொகையாக கோரிய திரு. முத்துராமலிங்கம் என்பவரின் ஏலத்தொகையை ஏற்கலாம்.
2. மன்றஅனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அவசர அவசியம் கருதி திரு. முத்துராமலிங்கம் என்பவருக்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 473** அனுமதிக்கப்பட்டது.
**ந.க.எண்:** 3204/2019/இ1

20) போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான ஆடுவதைக் கூடத்தில் தற்பொழுது சிறு சிறு பழுதுகள் உள்ளதாலும் அதற்கு சாதாரண மராமத்து பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2,00,000/–ஐ பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலகக் குறிப்பு :**மன்றம் அனுமதிக்கலாம்
**தீர்மான எண் : 474** அனுமதிக்கப்பட்டது.
**ந.க.எண்: 3072**/19/இ1

**21)** இந்நகராட்சி துப்புரவு பணியாளர்களாக பணிபுரியும் திரு.V.மாரிச்சாமி மற்றும் **17** நபர்களால் பணிவரன்முறை செய்ய கோருவது தொடர்பாக **30.05.2017**ம் தேதி மேல்முறையீடு மற்றும் மறுசீராய்வு செய்யப்பட்டதில் துப்புரவு பணியாளர்களுக்கு சாதகமாக வரப்பெற்ற தீர்ப்பின் மீது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்: **35083/2013/J3** நாள்:**14.06.2017** ல் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய கோரியதன் அடிப்படையில், டெல்லி உச்சநீதின்றத்தில் SLP(C) No.**22176/2017** & **21654/2017** வழக்கு தொடரப்பட்டு, வழக்கு விசாரணை நடைபெற்று வரும் நிலையில் இவ்வழக்கிற்கு திரு.ஐ.கணேசன், அரசு வழக்கறிஞர் டெல்லி உச்சநீதிமன்றம் அவர்களின் **15.07.2019**ம் தேதிய கடிதத்தில் வழக்கு ஆஜராகியமைக்கும், அதற்கான ஆவணங்கள் தயார் செய்யப்பட்டமைக்கு மற்றும் நீதிமன்ற கட்டணங்கள் செலுத்துவது தொடர்பாக கீழ்க்கண்டவாறு கட்டணங்கள் கோரியுள்ளார்.

| | | |
|---|---|---|
| • Towards appearance SLP( c ) No 22176/2017 & S.L.P Diary No.21654/2017 Dated 01.07.2019 | : | ரூ.20000/- |
| • Preparing Paper books to all respondent in S.L.P © No.22176/2017 | : | ரூ.12000/- |
| • Cost amount (Rs.1000/-) Imposed by Supreme Court and other incidental expenses | : | ரூ.10000/- |
| **மொத்தம்** | **:** | **ரூ.42000/–** |

மேற்படி வழக்கு **02.08.2019**ம் தேதி வழக்கு விசாரணைக்கு வர இருப்பதாகவும் **01.08.2019**ம் தேதிக்குள் வழக்கு தொடர்பான கட்டணங்களை உச்சநீதிமன்றத்தில் செலுத்த வேண்டியுள்ளதால் நிர்வாக நலன் கருதி வழக்கறிஞர் மற்றும் உச்சநீதிமன்ற கட்டணம் ரூ.42000/– வழங்க மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 475** அனுமதிக்கப்பட்டது.

**(ந.க.எண்.2760/2012/எச்1)**

தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி